# கிண்ணியாவில் இஸ்லாமிய நிதியியல் முறையினை விரிவாக்குவதில் கிண்ணியா சமூக சேவை நிறுவனத்தின் பங்களிப்பு

**Supervisor**
*Mr. K. Muhammed Rifty,*
*Lecturer (Prob.),*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Mr. MRM. Ramees,*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

ஆய்வுச் சுருக்கம்

இஸ்லாமிய வங்கி முறையானது முஸ்லிம் நாடுகளில் மாத்திரமின்றி, முஸ்லிமல்லாத நாடுகளிலும் பாரிய வளர்ச்சி கண்டு வருவதினை அவதானிக்கலாம். இதற்கு எமது நாடான இலங்கையும் விதிவிலக்கல்ல என்பது குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் அதிகளவாக பாரம்பரிய நிதி நிறுவனங்களே காணப்படுகின்றன. இஸ்லாமிய வங்கி முறையைப் பொறுத்தவரை இரண்டு அடிப்படையில் செயற்படுகின்றது. முழுமையான இஸ்லாமிய நிதியியல் செயற்பாடுகளைக் கொண்ட தனியான வங்கியமைப்பு (Full fledged Islamic bank), அடுத்து பாரம்பரிய வங்கியினூடாக இஸ்லாமிய நிதிச்சேவையினை வழங்குகின்ற ஒரு பிரிவாகவும் (Islamic banking Window) காணப்படுகிறது. அத்தோடு சில சமூக சேவை நிறுவனங்களும் இஸ்லாமிய நிதியியல் செயற்பாட்டினை வழங்குகின்றது. இதேபோன்று கிண்ணியாப் பிரதேசத்தில் இஸ்லாமிய நிதிச் சேவையினை வழங்குகின்ற நிதி நிறுவனங்களில் ஒன்றே கிண்ணியா சமூக சேவை நிறுவனமாகும்.

இவ்வாய்வின் பிரதான நோக்கமாக கிண்ணியா சமூக சேவை நிறுவனம் கிண்ணியாப் பிரதேசத்தில் இஸ்லாமிய நிதியியலை அறிமுகம் செய்வதிலும், அதனை விரிவாக்குவதிலும் எவ்வாறு பங்களிப்புச் செலுத்துகின்றது என ஆய்வு செய்வதே இவ்வாய்வின் பிரதான இலக்காகும்.

மேலும் இவ்வாய்விற்காக முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதன்மைத் தரவுகள் நேர்காணல், வினாக்கொத்து, அவதானிப்பு, கலந்துரையாடல் என்பவற்றினூடாக பெற்றுக் கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளுக்காக கிண்ணியா சமூக சேவை நிதியத்தினால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம், ஆண்டறிக்கைகள், நூல்கள், பத்திரிகைகள், பருவகால இதழ்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையதளங்கள் மற்றும் தலைப்போடு சம்மந்தப்பட்ட வெளியீடுகள் போன்றன பயன்படுத்தப்பட்டன. பெறப்பட்ட தரவுகளானது MS-EXCEL மற்றும் SPSS Softwares மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வின் பிரதான கண்டுபிடிப்புக்களாக இப்பிரதேச மக்கள் பாரம்பரிய வங்கிச் செயற்பாடுகளிலிருந்து விலகி, இஸ்லாமிய வங்கியின் பக்கம் தங்களது தொடர்புகளை வைத்துக் கொள்ள வேண்டும் என அதிகமானோர் விரும்புகின்றனர். இருந்தாலும் அதற்கான போதிய வழிகாட்டல்கள், ஆலோசனைகள் இல்லாததினால் சிலர் பாரம்பரிய வங்கிகளிலேயே தங்கி இருக்கின்றனர்.

ஆகவே இவ்வாய்வின் முடிவாக கிண்ணியா சமூக சேவை நிறுவனம் இப்பிரதேசத்தில் இஸ்லாமிய நிதியியல் முறையினை விருத்தி செய்வதில் ஓரளவு பங்காற்றியுள்ளது. இருந்தாலும் அதன் பங்களிப்பு எதிர்பார்த்தளவில் இல்லாததினால் இஸ்லாமிய நிதியியல் பற்றிய போதியளவான அறிவினை இப்பிரதேச மக்கள் பெற்றிருக்கவில்லை. இதற்கான

முன்மொழிவுகள் மற்றும் சிபாரிசுகளாக கிண்ணியா சமூக சேவை நிறுவனம் இஸ்லாமிய நிதியியல் பற்றியும், இஸ்லாமிய வங்கி பற்றியும் இப்பிரதேச மக்கள் மன்றத்தில் விழிப்புணர்வுகளையும், அறிவூட்டல்களையும் அதிகமாக செய்கின்ற போது இப்பிரதேசத்தில் இஸ்லாமிய நிதியியல் விருத்தியடையும் என்பதில் சந்தேகமில்லை.

**Key Words:-** (இஸ்லாமிய வங்கி முறைமை, கிண்ணியா சமூக சேவை நிறுவனம், கிண்ணியா, இஸ்லாமிய வங்கியின் வளர்ச்சி)